பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**03 12 2025** **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் முதலாவது குடியரசுத்தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாதின் பிறந்தநாளையொட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் புகழாரம் சூட்டியுள்ளனர்.
2. குடும்ப அட்டைகளை கணினி மயமாக்கும் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.
3. ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் போலியான தகவல்களை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
4. தில்லி மாநகராட்சியில் 12 வார்டுகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பிஜேபி 7 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.
5. குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rohan Kapoor — Ruthvika Shivani** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

நாட்டின் முதலாவது குடியரசுத்தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாதின் பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று காலை குடியரசுத் தலைவர் மாளிகையில் டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்.

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் திருவுருவப்படத்திற்கு, மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா, மாநிலங்களவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஷ், மத்திய அமைச்சர்கள் திரு கிரண் ரிஜிஜூ, திரு அர்ஜூன்ராம் மெக்வால், காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே, காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி சோனியாகாந்தி உள்ளிட்ட தலைவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், சுதந்திரப் போராட்ட வீரராக திகழ்ந்த ராஜேந்திர பிரசாத், நாட்டின் அரசியல் சாசனத்தை வகுப்பதற்கு வழிகாட்டியாக திகழந்தவர் என்று கூறியுள்ளார்.

ஜனநாயக மாண்புகளை பாதுகாப்பதில் அவர் சிறந்து விளங்கினார் என்றும் குடியரசு துணைத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் ராஜேந்திர பிரசாதின் பிறந்தநாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் சிறப்பாக பங்களித்த டாக்டர் ராஜேந்திர பிரசாத் அர்ப்பணிப்பு உணர்வோடு நாட்டுக்காக உழைத்தவர் என்று கூறியுள்ளார்.

அவருடைய எளிமையும், சேவையும் வருங்கால சந்ததியினருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், நேர்வழியில் நின்று அர்ப்பணிப்பு உணர்வோடு தாய்நாட்டிற்காக உழைத்தவர் ராஜேந்திர பிரசாத் என்று கூறியுள்ளார்.

நாட்டின் முதல் குடியரசுத் தலைவராக பதவி வகித்த அவர், நாட்டின் இறையாண்மைக்காகவும், ஒப்பற்ற கண்ணியத்துடனும் சேவையாற்றியவர் என்றும் பாராட்டியுள்ளார்.

சுதந்திரப் போராட்டத்தில் அவர் முன்னிலை வகித்தவர் என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

குடும்ப அட்டைகளை கணினி மயமாக்கும் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளதாக மத்திய உணவு மற்றும் பொதுவிநியோகத் திட்டத்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அமைச்சர், இதுவரை 20 கோடியே 58 லட்சம் குடும்ப அட்டைகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இலவச உணவு தானியங்கள் வழங்கும் பிரதமரின் அன்ன யோஜனா திட்டம் 2029-ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின்கீழ், ஏழை எளிய மக்களுக்கு மாதத்திற்கு 5 கிலோ உணவு தானியம் இலவசமாக வழங்கப்பட்டு வருவதாகவும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

போலியான செய்திகள் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளன என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சமூக ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் போலியான செய்திகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி போலியாக தயாரிக்கப்படும் காணொலி பதிவுகள் ஆகியவற்றை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தொலைக்காட்சி மற்றும் நாளேடுகளில் வெளியாகும் செய்திகள் குறித்த புகார்களை மத்திய அரசும், இந்திய பத்திரிகை குழுமமும் உன்னிப்பாக கண்காணித்து வருவதாக அவர் கூறினார்.

மாநில அரசுகளும் போலியான தகவல்களை தடுக்க ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

தில்லி மாநகராட்சியில் 12 வார்டுகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பிஜேபி 7 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

ஆம் ஆத்மி **3** இடங்களிலும், காங்கிரஸ் மற்றும் அகில இந்திய ஃபார்வடு பிளாக் ஆகியவை தலா ஒரு இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

தில்லி மாநகராட்சி வார்டுகளுக்கான இடைத்தேர்தல் கடந்த மாதம் **30**-ஆம் தேதி நடைபெற்றது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய சாந்தினி சௌக் நாடாளுமன்ற உறுப்பினர் திரு **Praveen** கண்டேல்வால், தில்லி தேர்தல் முடிவுகள் பிஜேபி-யின் சிறப்பான செயல்பாடுகளை பிரதிபலிப்பதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் இம்மாதம் **11**-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தில் விடுபட்ட வாக்காளர்கள் மற்றும் புதிய வாக்காளர்கள், இந்த காலநீட்டிப்பை பயன்படுத்தி தங்களது படிவங்களை வாக்குச்சாவடி அலுவலரிடம் அளிக்குமாறு ஆட்சியர் திரு சரவணன் கேட்டுக்கொண்டார்.

***(Voice Byte — ராஜசேகரன் — 42 Sec. )***

<<<<<<>>>>>>

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று காலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலு குறைந்துள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

***(Voice Byte — செந்தாமரை கண்ணன் — 37 Sec. )***

<<<<<<>>>>>>

இலங்கையில் புயல் மற்றும் கனமழையால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 474-ஆக உயர்ந்துள்ளது.

காணாமல் போன 356 பேரை தேடும் பணியும் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

புயல் மற்றும் கனமழையால் கண்டி மாவட்டம் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

அம்மாவட்டத்தில் மட்டும் 118 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, இலங்கையில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணப் பொருட்கள் ஆபரேஷன் சாகர் பந்து திட்டத்தின்கீழ் அனுப்பப்பட்டு வருகின்றன.

நிவாரணப் பொருட்களுடன் அனுப்ப்பட்ட ஐ என் எஸ் சுகன்யா, போர் கப்பல் அந்நாட்டின் திரிகோணமலை சென்றடைந்துள்ளது.

அங்கிருந்து, இலங்கை விமானப்படை மூலம் கிழக்கு மாகாணத்திற்கு அந்த பொருட்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அங்கு சென்றுள்ள இந்தியாவின் மீட்புப்படையினர் தேசிய பேரிடர் மீட்புப்படையினருடன் இணைந்து **800**-க்கும் மேற்பட்டுள்ளோரை பத்திரமாக மீட்டுள்ளனர்.

இந்திய விமானப்படை ஹெலிகாப்டர் மூலம் ஐந்தரை டன் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் கூடாரங்களை அமைப்பதற்கு தேவையான பொருட்கள், மருந்துப் பொருட்கள் ஆகியவை விநியோகிக்கப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

சபரிமலை ஐயப்பன் கோவில் தங்கத்தகடு காணாமல் போன விவகாரம் குறித்த புலனாய்வு விசாரணையை, சிறப்பு புலனாய்வுக்குழு மேற்கொள்ள மேலும் ஒருமாத கால அவகாசத்தை அம்மாநில உயர்நீதிமன்றம் அளித்துள்ளது.

இதற்காக பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆவணங்களை அமலாக்கத்துறையினர் பார்வையிடவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rohan Kapoor — Ruthvika Shivani** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **18-21, 21-9, 21-18** என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் **Kenzie Yoe — Luna Saffana** இணையை வென்றது.

இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில், **Ashith Surya — Amrutha** இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

----------------

குவாலியரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் நிதின்குமார் சின்ஹா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **6-3, 6-3** என்ற செட் கணக்கில், **Shanker Heisnam -**ஐ வென்றார்.

இப்போட்டியில் இந்தியாவின் ஆரியன்ஷா, திக் விஜய் பிரதாப் சிங் ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**-------------------**

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ராய்ப்பூரில் இப்போட்டி, பிற்பகல் மணி **1.30-**க்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>>**